# மணலாறு அதிரடியில் 6 படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)
மணலாறு பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட திடீர் அதிரடித்தாக்குதலில் ஆறுபடையினர் கொல்லப்பட்டனர்என

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 10 இதழ் 288
யாழ்ப்பாணம் புதன்கிழமை 25 — 11 — 1992

## படை முகாம்கள் உஷார் நிலையில்

(கொழும்பு)
வடக்கு – கிழக்கில் சகல படைமுகாம்களும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

(2ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாதுகாப்பு திருப்தியாக இல்லை!!

(கொழும்பு)
கொழும்பு மாநகரின் பாதுகாப்பு அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை எனச் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலிலிருந்து கொழும்பைப் பாதுகாப்பதற்

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ பலாலி முகாம் கிழக்கு எல்லையில்

# புலிகளின் உக்கிரத் தாக்குதலில்

# ஐம்பது இராணுவத்தினர் பலி!

## 150 காவலரண்கள் அழிப்பு!!

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமின் கிழக்கு எல்லையில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய பாரிய தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்ட படையினர் பலியானார்கள். பெருமளவு இராணுவத்தினர் காயமடைந்தனர் 150 காவலரண்கள் தாக்கி அழிக்கப்பட்டன. பெருந்தொகையான ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

(2ம் பக்கம் பார்க்க)

## பெருமளவு ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்

(யாழ்ப்பாணம்)
பலாலியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் பெருமளவு இராணுவத்தளபாடங்களை கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்:

★ எம். கே. இயந்திர துப்பாக்கி - 01
★ ஜி. பி. எம். ஜி - 01
★ ஏ.கே.எல்.எம்.ஜி. - 01
★ ஆர்.பி. ஜி - 03
★ டொங்கான் - 05
★ 2 அங். மோட்டார் - 04
★ 60 எம் எம். மோட்டார் - 03
★ ரி 81 ரக துப்பாக்கி - 25
★ ரி 51 (2) ரக துப்பாக்கி - 03
★ ரி 56 (1) ரக துப்பாக்கி

(4-ம் பக்கம் பார்க்க)

## 46 வேங்கைகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
நேற்று முன்தினமிரவு பலாலிப் பகுதியில் இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 46 போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தாய் மண்ணை மீட்கும் புனிதப் போரில் தமது இன்னுயிர்களை ஈந்த 46 விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ விடுதலைப்

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
பலாலி கிழக்கு எல்லையில் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வித்துடல்கள் இன்று பகல் பத்து மணிவரை அவர்களின் வீடுகளில் வைக

(4-ம் பக்கம் பார்க்

## பீரங்கி அழிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)
பலாலி கிழக்கு எல்லைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற சண்டையில் இராணுவ காவலரணிலிருந்த பீரங்கி ஒன்று புலிகளால் அழிக்கப்பட்டது.
வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த இப்பீரங்கியைக் கைப்பற்றிய விடுதலைப்புலிகள் அதனைக்குண்டு வைத்து தகர்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஈ)

## நாடு பூராவும் தாக்குதல்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இந்த வாரத்தில் இலங்கை பூராவும் பல பகுதிகளில் தாக்குதல் நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வட - கிழக்கு இணைப்பை சுதந்திரக்கட்சி ஏற்காது!

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு இணைப்பை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒருபோதும் ஏற்கமாட்டாது என அதன் தலைவரும் எதிர்க்கட்சிதலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க

(4ம் பக்கம் பார்க்க)

## பலாலியிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை ஒருமணி தொடக்கம் தொடர்ச்சியாக பலமணி நேரமாக வலி-கிழக்குப் பகுதி குடியிருப்புக்களை நோக்கி அகோர ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் பார்வையில் தப்பிக்க அரசியல் வாதிகளின் நடமாட்டங்களில் மாற்றம்

(கொழும்பு)
கொழும்பில் அரசியல்வாதிகளினதும், உயர் பாதுகாப்பு அதிகாரிகளினதும் நடமாட்டங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ''ஐலண்ட்' தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு படையினர் வாகனம்மீது துப்பாக்கி சூடு ஒருவர் பலி

(கொழும்பு)
கொழும்பு வீதித்தடை ஒன்றில் பொலிசாரின் எச்சரிக்கையின் பேரில் நிறுத்தாமல் சென்ற வாகனம் ஒன்றின்மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த

(4-ம் பக்கம் பார்க்க)

## திம்பிரிகசியாய சம்பவம்:

## தொலைபேசியில் உரையாடிய தமிழர் கைது!

(கொழும்பு)
ஜனாதிபதி பிரேமதாஸாவின் காரியதரிசியைக் கொழும்பு திம்பிரிகசியாவில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கொலை செய்ய மேற்கொண்ட முயற்சி தோல

(4ம் பக்கம் பார்க்க)

## விமானப்படைத் தளபதிக்கும் உயிராபத்து என எச்சரிக்கை!

(கொழும்பு)
விமானப் படைத் தளபதி ஏயர் மாஷல் ரெறன்ஸ் குணவர்த்தனவிற்கும் உயிராபத்து ஏற்படலாமென புலனாய்வு பிரிவினர் அவருக்கு எச்சரித்துள்ளனர்.
கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ கொல்லப்படுவதற்கு இரு வாரங்களுக்கு முன் அவருக்கும் உயிராபத்து உள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் அவரை எச்சரித்திருந்தனராம்.

(2ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மணமக்கள் தேவை

ஆண், பெண் இருபாலாருடைய ஜாதகக் குறிப்புகளும் எம்மிடம் உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி A. C மகேந்திரன் நீர்வேலி வடக்கு (அரசகேசரிப் பிள்ளையார் வீதி) நீர்வேலி. (எ-2610)

### "ஏலோர் எம்பாவாய்"

துணிகளின் பளிச்சிடும் தூய வெண்மைக்கு மில்க் வைற் தூள் அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது. 10 மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப் பக்கற் சேர்ப்பித்து "திருப்பள்ளியெழுச்சி, திருஎம்பாவை" சேர்ந்த நூலின் பிரதியொன்று அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க் வைற், யாழ்ப்பாணம். (எ-2611)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக புவியியல் மண்டபத்தில் எமது வானிலை என்ற தலைப்பில் புவியல் தலைவர் பாலச்சந்திரன் விரிவுரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார். (159)

### படை முகாம்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனின் 38 வது பிறந்த தினம் நாளை வியாழக்கிழமை யாதலால் புலிகள் படை முகாம்கள் மீது பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற காரணத்தினாலேயே படையினர் உஷார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக திரு. பிரபாகரனின் பிறந்த தினம் குறித்தும் அதையொட்டி பெரும் தாக்குதல் நிகழலாமெனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் அடிக்கடி எச்சரித்து வருவதும் தெரிந்ததே.

## இராசி பலன்

25-11-1992

(தமிழுக்கு கார்த்திகை 10)

புதன்கிழமை

பிரதமை பி. ப. 2-59 வரை. அனுஷம் காலை 6-19 வரை. அமிர்தசித்தயோகம், கரிநாள் இராகுகாலம் பகல் 12-12 முதல் 1-42 வரை, சுபநேரம மாலை 4-42 முதல் 6-12வரை.

மேடம்: வீண் அலைச்சல், தர்க்கம், பெண்வகை சிரமம்.

இடபம்: சுபகாரிய முயற்சி, தனலாபம், தொழில்சிறப்பு.

மிதுனம்: சுபச்செய்தி, நண்பர் உதவி, குடும்ப மகிழ்ச்சி.

கடகம்: தொழில் பீதி, மனத்தாங்கல், அவசர பயணம்.

சிங்கம்: எதிர்பாராத தொல்லை, பணமுடை, காரிய தாமதம்.

கன்னி: குடும்ப செலவு. புத்திரர் பெருமை, தொழில் சிந்தை.

துலாம்: பெரியோர்பகை, சோம்பல், கடமை தவறுதல்.

விருச்சிகம்: பந்துவருகை, வித்துவான் சந்திப்பு, தனலாபம்.

தனுசு: கடிததொல்லை, உடல் உபாதை, கருத்து முரண்பாடு.

மகரம்: சிரமத்தின்பின் நன்மை, தொழில் சிறப்பு தெய்வவழிபாடு.

கும்பம்: தொழில் லாபம், குடும்ப சிறப்பு, தாய்வழி உதவி.

மீனம்: பயண தாமதம், வேதனை, வயிற்றுநோய்.

— ஜோஸ்யர்

மண் மீட்போம்
மரம் காப்போம்

## வேலை வாய்ப்பு

விவசாயப்பண்ணை, தெங்குச்செய்கை ஆகியவற்றில் கல்வி அறிவும் மூன்று வருட அனுபவமும், அல்லது பத்துவருடத்திற்குக் குறையாத அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் சான்றிதழ்களுடன் இம்மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் காலை 10-00 மணிக்கும் 12 00 மணிக்கும் இடையில் யாழ்ம்பாணம்கந்தர்மடத்தில் அமைந்துள்ள யாழ் மாவட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்திற்கு வருகை தரும்படி வேண்டப்படுகின்றனர். (எ-2613)

சாவகச்சேரி நகரசபை

## வரவு செலவுத் திட்டம் - 1993

(255ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979ம் ஆண்டின் 13ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178 (3)ம் பிரிவின் பிரகாரம இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட 1993ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டம் இச்சபையில் 30-11-92ம் திகதி தொடக்கம் ஏழு (7) நாட்களுக்கு அலுவலக நேரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 23-11-92. (எ-2612)

## கணக்கியல் கணக்காய்வுப் பயிற்சி நெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை, கணக்கியல் மற்றும் கணக்காய்வு தொடர்பான பயிற்சி நெறியொன்றை நடாத்தவுள்ளது. கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த, மாவீரர் போராளிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் மற்றும் வசதி குறைந்த மாணவர்களிடமிருந்தும் (இருபாலாரும்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி நெறிக்கான செலவு முழுவதும் எம்மால் ஈடுசெய்யப்படும்.

விண்ணப்ப முடிவுநாள் 10-12-1992.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

யாழ். மாவட்ட
வருவாய்ப்பகுதிச்செயலகம்
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(எ-2614)

மண்ணிற்காய் மரணித்த
மாவீரரின்
இப்புனித வாரத்திலேயே!

நாமும்ஒருவருடத்தினைநிறைவு செய்கின்றோம் இக்குறுகிய காலத்தில் பெரும்வளர்ச்சியடைய உறுதுணையாக இருந்த அன்பர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

சகல தமிழ், ஆங்கில
★ புத்தகங்கள்
★ சஞ்சிகைகள்

என்பவற்றை நியாயவிலையில் பெற்றுக்கொள்ளவும். தாங்கள் படித்துமுடித்த புத்தகங்கள், சஞ்சிகைகளை நியாயவிலையில் விற்பனை செய்யவும், இன்றே வாருங்கள்:

## யாழ். பழைய புத்தகக் கடை

அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி,
(விவேகானந்தா அச்சகம் முன்பாக)
யாழ்ப்பாணம். (சி-6999)

## பலாலி முகாம் கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினமிரவு 11-30 மணியளவில் பலாலி இராணுவ முகாமின் கிழக்கு எல்லையில் பலமைல் நீளமான தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

இரவு ஆரம்பித்த தாக்குதலைத் தொடர்ந்து இருபகுதியினரிடையேயும் உக்கிர மோதல் நேற்று அதிகாலை 3-30மணிவரையும் நடைபெற்றது.

படையினருக்கு உதவியாக ஹெலிகொப்டரிலிருந்து 50 ஹலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது பலாலி விமானத் தளத்தின் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்த முன்னணி காவலரண்களான தொண்டமனாறு சடலக்கரையிலிருந்து ஒட்டகப்புலம் வரையிலான நான்கரை கிலோ மீற்றர் வரையிலுள்ள 150 காவலரண்கள் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. தொண்டமனாறு, இடைக்காடு, தப்பாலை, ஒட்டகப்புலம் பகுதிகளில் நடத்தப்பட்ட பாரிய தாக்குதல் மூலம் இக்காவலரண்கள் தகர்க்கப்பட்டன.

விடுதலைப்புலிகள் நடத்திய உக்கிர தாக்குதலைத் தொடர்ந்து இறந்த இராணுவத்தினரின் சடலங்களையும் விட்டுவிட்டு ஏனைய இராணுவத்தினர் முகாமின் உட்பகுதியை நோக்கி ஓட்டமெடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் 37 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் படையினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன. (ரி)

### விமானப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கடற்படைத் தளபதி கிளான்ஸி கொல்லப்பட்ட செய்தியை கேட்ட பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்கா உடனடியாக தொலைபேசி மூலம் இராணுவ தளபதியையும், விமானப்படைத் தளபதியையும் எச்சரித்ததுடன் பாதுகாப்பை பலப்படுத்துமாறும் கூறினாராம். (சி)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் க. சபாரத்தினம்
(யாழ். இந்து ஓய்வுபெற்ற அதிபர்)


எண்பத் திரண்டினிலே எமைப் பிரிந்த
என் அதிபரே! அறிவின் சிகரமே!
இந்துவின் மைந்தனாய் உதித்து
இந்துவின் அதிபராய் உயர்ந்து
அளப்பருஞ் சேவையாற்றிய பின்னரும்
ஈழநாட்டிதழின் ஆசிரியராயிருந்ததுடன்
சமூகத் தொண்டனாய் வாழ்ந்திருந்த
சற்குருவை நாமின்று பிரியலானோம்

நான் கற்ற காலை என்னை வழிநடத்திய
என் குருநாதருக்கு என்

கண்ணீர் அஞ்சலிகள்

பழைய மாணவன்
யாழ். இந்துக் கல்லூரி
சிவசிறீ ச. சிறீராஜாக் குருக்கள்
கோண்டாவில் மேற்கு.
(சி-7002)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23 — 07 — 1967

உதிர்வு: 22 — 11 — 1987

அமரர்
சின்னத்தம்பி பாலகிருஷ்ணன்
(சதீஸ்)

தெய்வமாகி எம் குலத்தை
செழிக்க வைத்த நல்லோய்
வைய வாழ்வு தன்னை நீத்து
வான வாழ்வை அடைந்தாலும்
ஐய நின்னை மறவாது
ஆண்டு பல சென்றாலும்
செய்ய பாதம் மனத்திருத்தி
சேர்ந்தெல்லோரும் வணங்குவோம்

உனது பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

நாவற்குழிச் சந்தி,
கைதடி. (சி-7003)

# ★ இலங்கை விமானப் படைக்கு— 'புக்காரா' யுத்த ஹெலிகொப்டர்களை வாங்குவதில் பலத்த முரண்பாடு

(கொழும்பு)

ஆர்ஜென்ரீனா தனியார் நிறுவனம் ஒன்றுக்கும் இலங்கை அரசுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை ஒன்றின் பிரகாரம் அரசாங்கம நான்கு 'புக்காரா' ஆகாய ஹெலிகொப்டர்களை விமானப்படை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது.

இதன் விலை மதிப்பீடு பத்து மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். விமானப் படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா இதற்கான கையொப்பத்தை இலங்கை அரசு சார்பில் கைச்சாத்திட்டுள்ளார்.

திறைசேரி அதிகாரிகள் இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு முன்னர், இவ் ஒப்பந்த 'கேள்விக் கோரிக்கைக்கு' முரண்பட்டதின் காரணமாக கைச்சாத்திட மறுத்துள்ளனர்.

விமானப்படையின் தொழில் நுட்ப குறியீடுகளை நிறைவேற்றுவதற்கு இந்த 'புக்காரா' ஹெலிகொப்டர்களின் பொருத்தப்பட்ட இயந்திரங்களும், உதிரிப்பாகங்களும் தற்பொழுது உற்பத்தி நிலையில் இருத்தல் வேண்டும். ஆனால் இவ் விமானங்களின் உற்பத்தி 1986 உடன் நிறுத்தப்பட்டுள்ளது.

விமானப்படையில் உள்ள தொழில் வல்லுனர்கள் இக் ஹெலிகொப்டர்களுக்குப் பதிலாக 'பிறேசிலியன்' உற்பத்தியான 'துர்கிகானு' ஹெலிகொப்டர்களை விரும்பினர். இதற்கான காரணம் இக் ஹெலிகொப்டர் விமானங்கள் தற்பொழுது உற்பத்தி நிலையில் உள்ளதாலும் விலையும் குறைவாக இருந்தமையே.

'புக்காரா' ஹெலிகொப்டர் ஒரு மணித்தியாலம் பறப்பதற்கு 408 அமெரிக்க டொலர் செலவாகும் ஆனால் 'துர்க்கானு' ஹெலிகொப்டருக்கு 110 அமெரிக்க டொலர் செலவாகியுள்ளது. இந்த செலவு இந்த ஹெலிகப்டருக்கு ஏற்படும் திருத்தங்களையும் அடக்குகிறது.

மேலும் 'புக்காரா' ஹெலிகப்டரின் எஞ்சின் ஆயிரம் மைல் ஓடுவதற்கு 4,00,000 அமெரிக்க டொலர் முடியும். ஆனால் 'துர்க்கானு' எஞ்சின் 2,00 000 அமெரிக்க டொலர் முடியும். தொழில் நுட்பவல்லுனர்களின் கருத்துப்படி 'புக்சாரா' ஹெலிகொப்டர்களின் திருத்தங்கள் பிரான்சிலும், ஆர்ஜென்டீனாவிலும் தான் செய்யமுடியும்.

இலங்கை விமானப்படை பணியாளர்கள் இத்திருத்தங்கள்பற்றி தாங்கள் மேலும் அறிவாற்றலை பெற்றபின்பே இந்த ஹெலிகொப்டர்களை பேணிக்கொள்ள முடியும்.

இதுசம்பந்தமான விடயங்கள் தற்பொழுது எழுதப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் தொழில் நுட்ப வல்லுனர்கள் கருத்துத் தெரிவிக்கையில் 'புக்காரா' தளநிலையைத் தாக்குவதற்கே உபயோகப்படுத்தமுடியும். ஆனால் 'துர்க்கானு' இரண்டு விதமான நோக்கங்களை செய்வதற்கும் உபயோகப்படுத்தலாம்.

ஒன்றுதளத் தாக்குதலுக்கும் மற்றது தற்பொழுது பிரிட்டன் றோயல் விமானப்படையினால் வழங்கப்படும் பயிற்சிக்கு உபயோகப்படுத்தலாம்.

உலகத்திலேயே உபயோகிக்கப்படும் புக்காரா ஹெலிகப்டர்களின் எண்ணிக்கை 48 ஆகும் ஆனால் 450 துர்க்கானு ஹெலிகொப்டர்கள் தற்போது 12 நாடுகளில் உபயோகிக்கப்படுகின்றன.

அகில உலக ஏயார் கிறவ்ட்; 91ம், 92ம் ஆண்டிற்கான அதன் விமரிசனத்தில் 1985ம் ஆண்டுக்குப்பின்னர் புக்காரா ஹெலிகொப்டர்கள் உற்பத்தி நிறுத்தப்பட்டதாகவும் எந்த ஒரு தேசத்துக்கும் அவை விற்பனையாகவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

5 புக்காரா ஹெலிகொப்டர்கள் மாத்திரம் 1989ம் ஆண்டு கொலம்பிய அரசிற்கு போதைவஸ்து எதிர்ப்பு நடவடிக்கைக்கு மாத்திரம் விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

## அடுத்த வாரம் இலங்கை கடற்படையில் பாரிய மாற்றங்கள்

(கொழும்பு)

இலங்கை கடற்படையில் அடுத்த வாரம் பாரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும், பல அதிகாரிகள் பதவி உயர்வு பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

20 உயர் அதிகாரிகள் வேறு பதவிகளுக்கு மாற்றம் செய்யப்படவுள்ளனர். தற்போது கிழக்கு பிராந்திய தளபதியாக இருக்கும் கொமடோர் சிசில் திஸரா கடற்படை தலைமையகத்திற்கு தலைமையதிகாரியாக பதவியுயர்வு பெறவுள்ளார்.

கப்டன் தரத்திலுள்ள இரு சிரேஷ்ட அதிகாரிகள் கொமடோர் பதவிக்கு உயர்த்தப்படவுள்ளனர். கடற் புலிகளின் தாக்குதலை முறியடிக்கவே இந்த திடீர் பதவி மாற்றங்களை புதிய கடற்படை தளபதி மேற்கொண்டுள்ளாராம். இதேவேளை வடக்கு-கிழக்கு-மேற்கு பிராந்திய தளபதிகளும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இதேவேளை மற்றும் பல அதிகாரிகளும் பதவி உயர்வு பெறவுள்ளனர். (சி)

---

## பூஷா முகாமில் கோஷ்டி மோதல்

(கொழும்பு)

பூசா முகாமில் பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் சந்தேகத்தின்பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இரு பிரிவினருக்கிடையில் பலத்த சண்டை நிகழ்ந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வழக்குத் தொடர்ந்த கைதிகளுக்கும் வழக்குத் தொடராத கைதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடே இச்சண்டைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது

இதனை இச்சிறையில் இருந்த ஒரு பகுதி கைதிகளை காலி சிறைச்சாலைக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சு)

---

## சைவ ஆசிரியர் கழகம்

(உடுவில்)

பண்டத்தரிப்புக் கோட்ட பாடசாலைகளின் சைவ ஆசிரியர் கழகமும் சைவநெறித் தொண்டர் சழகமும் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. (109)

---

## ★ கொழும்பில் தங்க முன்பு பதிவு செய்தோர் மீண்டும் பதியத் தேவையில்லை

(கொழும்பு)

மேல்மாகாணத்தில்- கொழும்பில் தற்காலிகமாக தங்கியுள்ளவர்கள் ஏற்கெனவே பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்திருந்தால் மீண்டும் பதிவு செய்யத் தேவையில்லை என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அவசர காலச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நாட்டில் உள்ள அனைவரும் குடும்ப அங்கத்தினர்களையும் தமது இல்லங்களில் தற்காலிகமாக தங்கியுள்ளோரையும் பொலிசில் பதிவு செய்ய வேண்டும் என்பதாகும். (சு)

---

## மாவீரர் வாரத்தில் சிரமதான நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களும் இன்று பல இடங்களில் சிரமதான நிகழ்வுகளைச் செய்யவுள்ளார்கள்.

கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி, கொடிகாமம் தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி நகர சபை, வலி தெற்கு, மேற்கு பிரதேசசபை, நல்லூர் பிரதேசசபை, யாழ் மாநகர சபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை வலி கிழக்குப் பிரதேசசபை, வலி மேற்குப் பிரதேசசபை, வலி வடக்கு பிரதேசசபை, சாவகச்சேரி பிரதேசசபை ஆகிய நிறுவனங்களும்-

யாழ்ப்பாணம் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மின்சார சபை, விலை மதிப்பீட்டுத் திணைக்களம், சமநலச் சேவை திணைக்களம், கோப்பாய் அஞ்சலகம், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி, நெல்லியடி இலங்கை வங்கி, சாவகச்சேரி இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கமநலச்சேவை நிலையம் கைதடி, அஞ்சலகம் மிருசுவில், கோப்பாய் நல்லூர். யாழ்ப்பாணம், உடுவில், தெல்லிப்பளை, சங்கானை, சண்டிலிப்பாய், பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் சிரமதானங்கள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை இன்று இரவு 7-30 மணிக்கு சங்கானை சித்தங்கேணி பிள்ளையார் கோவிலடியில் மாவீரர் கூட்டம் இடம்பெறவுள்ளது.

தீவகக் கோட்டத்தினால் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த கூட்டமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (சு)

---

## கொழும்பில் தமிழ் வாலிபர் கைது

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் வாலிபர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுத்து வந்ததாக கிழக்கிலங்கை இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை உடையார் வீதியைச் சேர்ந்த சுரேஷ் என்று அழைக்கப்படும் இந்த வாலிபர் முகத்துவாரத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேல் வசித்து வந்துள்ளார் என்றும் உதைபந்தாட்டப் போட்டியில் ஆர்வமுள்ள இவர் கொழும்பில் பல உதைபந்தாட்டங்களிலும் பங்குபற்றி இருக்கின்றார் என்றும் கூறப்படுகிறது. (சு)

---

## மண்வெட்டி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மியமேம்பாட்டுக் கழகத்தினரால் கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக முதலை மார்க் மண்வெட்டிகள் வழங்கப்படுகின்றன.

கிராமிய உற்பத்திக்குழு வட்ட இணைப்பாளர்களுடன் தொடர்புகொண்டு மண்வெட்டிகளை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுள்ளது.

---

## இரத்ததானம் செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையினால் பெருமளவில் காயப்பட்டுவரும் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் இரத்தம் பற்றாக்குறையேற்பட்டுள்ளதால் உடன் இரத்தானம் செய்யும்படி இரத்தவங்கியினர் நேற்று அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொது ஸ்தாபனங்கள், கல்லூரி மாணவர்கள் முன்வந்து இவ்வேளையில் இரத்ததானப் பணிகளில் ஈடுபடுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இரத்ததானம் செய்வோர்கள் உடன் இரத்தவங்கியுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளது. (56)

---

★ தமிழீழ மாவீரர் நாள் — 1992

### மாவீரர்களே!

இனிய ஈழம் மலரும் — நம்
புதல்வர் கனவு பலிக்கும்
புரட்சிக் கனலும் வெடிக்கும் — இங்கு
புதிய நாடு பிறக்கும்.

— தமிழீழ மாவீரர் பணிமனை

---

## உதைபந்தாட்ட ஒளிவிளக்கு அணைந்தது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் ஆரம்பக் கழகங்களில் ஒன்றான தெல்லிப்பழை 'கிறுஸ் கொப்பர்ஸ்' அணியின் கர்த்தாவாகவும் பயிற்றுனராகவும் இருந்து 'ரீ. பி.' என எல்லோராலும் அழைக்கப்பட்ட திரு. ரீ. பி. பத்மநாதன் காலமானதையிட்டு பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் தனது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

எமது லீக்கின் ஆரம்ப காலத்திலே எம்முடன் தனது கழகத்தை இணைத்து பல வெற்றிகளைச் சூடியவர் அமரர் பத்மநாதன் அவர்கள் கிறுஸ் கொப்பர்ஸ் அணியினூடாக பல தரமான வீரர்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்ததுடன், தேசிய மட்டத்தில் அவர்கள் பிரகாசிக்க வழி அமைத்துக் கொடுத்தவர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 1ம் பிரிவு உதைபந்தாட்ட அணி பத்து வருடங்கள் தொடர்ச்சியாக பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் சாம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்த வரலாற்றுப் பெருமை அமரர் அவர்களையே சாரும்.

தலைசிறந்த அணிகளைக் கொண்ட தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, சென். ஹென்றீஸ் கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், லங்கா சிமெந்து லிமிட்டெட் போன்றவற்றின் பயிற்றுனராக இருந்தவர் அமரர்

அமரரின் சிறந்த பயிற்சியினாலேயே இவ்வருடமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் தோற்கடித்துசாம்பியனானது.

இவ்வாறு சாதனைகள் படைத்த தேசியரீதியில் பிரபல்யமான ஒரு உதைபந்தாட்டப் பயிற்றுனரின் இழப்பு உதைபந்தாட்ட சமூகத்துக்கு ஒரு பேரிழப்பாகும் என்று பருத்தித்துறை மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் திரு. தி. வரதராசன் தெரிவித்துள்ளார். (சி)

# இனப்பிரச்சினையைத் தீர்க்க

## வெளிநாடுகளின் உதவி தேவை இல்லை!

### — பிரதமர்

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு வெளிநாடுகளின் உதவிகள் தேவையில்லை பிரதம மந்திரியும், பாதுகாப்பு அமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு சகல கட்சிகளின் உதவியுடன் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதினால் வெளிநாட்டவர்களின் உதவிகள் தேவைப்படாது என்று பிரதமர் மேலும் கூறினார். (வி)

# 8 தமிழ் இளைஞர் மலையகத்தில் கைது

(கொழும்பு)

ஜே. வி. பி.யுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களான எட்டு தமிழ் இளைஞர்களை நானுஓயா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நானுஓயா பகுதியில் இவர்கள் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துள்ளனராம்.

தற்போது ஜே. வி. பியினர் மீண்டும் ஆட்கள் திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ★ புலிகளுக்கு இடம் கொடுத்த தமிழ் கோடீஸ்வரர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் உள்ள முக்கிய பிரமுகர்களை கொலை செய்ய வந்த விடுதலைப்புலியைச் சேர்ந்தவர்கள் எனக்கருதப்படும் இளைஞர் சிலருக்கு விடுதி வசதி செய்து கொடுத்த கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த தமிழ் கோடீஸ்வரர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலியைச் சேர்ந்தவர்கள் எனக்கருதப்படும் பல இளைஞர்களுக்கு கொழும்பில் வசதியாகத் தங்கி இருப்பதற்கு விடுதி, உணவு வசதிகளை நீண்ட நாட்களாக மிக ரகசியமாக செய்து கொடுத்து வந்த மேற்படி தமிழ் கோடீஸ்வரரை பொலிஸார் கைது செய்ததுடன் கொழும்பில் நடைபெற்ற பல கொலைக் குற்றங்களில் இந்தக் கோடீஸ்வரரின் மகனுக்கும் மிகநெருங்கிய தொடர்பு உண்டு என்ற சந்தேகத்தில் இவரின்மகனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதே நேரம் விடுதலைப்புலி இளைஞர் பலருக்கு மோட்டார் சைக்கிள் வாங்கிக்கொடுத்தார் என்ற சந்தேகத்தில் கொழும்பு செட்டித்தெருவைச்சேர்ந்த வர்த்தகர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக நேற்று வைத்தியசாலை ஊழியர்கள் இரத்ததானம் செய்தனர். பாடசாலை மாணவர்கள் பலர் இரத்த தானம் செய்ததையும் காணமுடிந்தது. (56)

## நாளை தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குமண வப்பலில நேற்று வந்த தபால்கள் நாளை முதல் விநியோகம் செய்யப்படுமென்று யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

குமணக்கப்பலில் வந்த தபால் பொதிகளை எடுத்து வருவதற்காக இன்று தபாலக ஊழியர்கள் பருத்தித்துறைக்குச் செல்லவுள்ளனர்.

(வி-159)

# விமான விபத்தில் 141 பேர் பலி

(பீக்கிங்)

தென்சீனாவில் 737 போயிங் விமானம் ஒன்று நேற்று விழுந்து நொருங்கியதில் 141 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

133 பயணிகளும் 8 விமான ஊழியர்களுமே உயிரிழந்தவர்கள் என அறிவிக்கப்படுகிறது. வானில்வெடித்தஇவ்விமானம் மலைக்குன்று ஒன்றின்மேல் விழுந்து நொருங்கியதாகக் கூறப்படுகிறது. (சு)

# புலிகளின் புலனாய்வுத்துறை தலைவர் கைதாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் நேற்று முன்தினம் அதிகாலை கொழும்பு முகத்துவாரம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு முகத்துவாரத்தில் பாதுகாப்பு நிறைந்த பகுதியில் ஆழ்ந்த நித்திரையில இவர் இருந்த வேளையில் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்ணண்டோ கொலைச் சம்பவம் தொடர்பாகவும் ஜனதிபதி செயலாளரின் பாதுகாப்பு ஊழியர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவங்களுடன் நெருங்கிய தொடர்புடையவராக இவர் கருதப்படுகின்றார்.

இச்சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட 12 பேரில் இவரும் ஒருவர் எனவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஸ)

## பெருமளவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

- 03
- ★ ரி 56 புதியது - 02
- ★ ஜி-3 புஷ்பட் - 02
- ★ ஜி-3 செட்பட் - 07
- ★ பிறவுனிங் பிஸ்டல் - 01
- ★ தொலை தொடர்பு சாதனம் - 02
- ★ மொபைல் செட் - 01
- ★ ஜி. பி. எம். முக்காலி - 02
- ★ 2 அங் ஷெல் - 93
- ★ 60 எம்.எம்.ஷெல் - 131
- ★ 60 எம்.எம். பரா ஷெல் - 52
- ★ ஆர். பி. ஜி ஷெல் - 42
- ★ ஆர். பி. ஜி. புறப்ளர் - 32
- ★ பராலைற் - 24
- ★ ரி 81 ரைபிள் கிரனேட் - 27
- ★ 81 மோட்டர்ஷெல் - 07
- ★ டப்பிநிலக்கண்ணி - 221
- ★ கிளேமோர் (சிறியது) -09
- ★ கிளேமோர் (பெரி.) - 02
- ★ கிளேமோர் வெடிக்க வைக்கும் கருவி - 09
- ★ 40 எம். எம். ஷெல் - 43
- ★ பீரங்கி ஷெல் - 05
- ★ ஏ.கே. எல். எம். ஜி. ரம்மகசின் - 02
- ★ ரி.என்.ரி. கிரனேட் - 29
- ★ சின்ன ஜே. ஆர். குண்டு - 20
- ★ பெரிய ஜே. ஆர். கைக்குண்டு - 03
- ★ புகைக்குண்டு - 88
- ★ ரி 81 மகசீன் - 88
- ★ ரி 52 (2) மகசின் - 31
- ★ ஜி-3, ஏ-3 மகசீன் - 31
- ★ ஜி-3, ஏ-3 மகசீன் - 36
- ★ 7.62 நடுத்தர ரவைகள் - 83, 175
- ★ ஆர். எம். தொடர் ரவைகள் - 5, 646
- ★ நேட்டோ ரவைகள் - 7, 307
- ★ நேட்டோ ரவைகள் (லிங்குடன்) - 6, 877
- ★ 7.92 எம். எம். லிங்குடன் - 1, 558
- ★ தண்ணீர்கான் - 17
- ★ தலைக்கவசம் - 50
- ★ சப்பாத்து(சோடி) - 350
- ★ உடுப்பு பாக் - 300
- ★ மழைக்கவசம் - 50
- ★ குண்டுதுளைக்காத அங்கி - 75

(ரி)

## கொழும்பில்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

கான பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிததன.

## மணலாறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த படையினர் மீது புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் இந்த ஆறு படையினரும் கொல்லப்பட்டதாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## வட கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்கா நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தில் அவர் மேலும் கூறுகையில்: அரசாங்கம் பல அறிக்கைகளை விடுவித்துவருகின்ற போதும் நாட்டில் யுத்தம் தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது.

இந்த சமயத்தில் தேவையற்ற செலவுகளை தவிர்த்து யுத்தத்தைமுடிவிற்குகொண்டு வர அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். (சி)

## 46 வேங்கைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

வீரச்சாவு அடைந்த போராளிகளின் பெயர் விபரங்கள் பற்றி உடனடியாக எதுவும் பெறமுடியவில்லை. (ரி)

## புலிகள் பார்வையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

புலிகளின் பார்வையிலிருந்து தப்பும் முகமாகவே இந்தப் பாதுகாப்பு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அடுத்த சில வாரங்களுள் முக்கிய அரசியல்வாதிகளினது நடமாட்டங்களைப் பெருமளவில் கட்டுப்படுத்துமாறும் அவர்களைப் பொலிசார் கேட்டுள்ளனர்.

(சி)

## இன்று மக்கள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கப்படும்.

வலிகாமம் கோட்டத்தில் சுன்னாகம் மத்திய சந்தையிலும் தென்மராட்சி கோட்டத்தில் சாவகச்சேரி சந்தையிலும், வடமராட்சி கோட்டத்தில் பருத்தித்துறை நகர் ஆகிய இடங்களில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடைகளில் இரண்டு மணி தொடக்கம் மூன்று முப்பது மணி வரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டு இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அவ் அவ் கோட்டங்களில் அமைந்துள்ள துயிலும் இல்லங்களில் விதைக்கப்படும்.

## திம்பிரிகசியாய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியுற்றது தொடர்பாகத் தொலைபேசியில் உரையாடிய தமிழரொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு வாட் பிளேஸில் உள்ள இந்தத் தமிழ் நபருக்கு ''நாங்கள் எதிர்பார்த்த விடயம் சற்றுத் தவறிவிட்டது'' என்று வந்த தொலைபேசிச் செய்தியைப் பதிவு செய்த புலனாய்வுப் பொலிஸார் இவருடன் மறுமுனையிலிருந்து தொடர்பு கொண்ட நபர் யார் என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டுத் தமது விசாரணைகளைத் தற்போது தீவிரப்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (வி)

# நயினாதீவு இளைஞர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் கொலைசெய்யப்பட்ட கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்ணண்டோவின் புகைப்படங்களை வைத்திருந்த இரு நயினாதீவைச் சேர்ந்த வாலிபர்களை நேற்று முன்தினம் பொலிசார் கைதுசெய்துள்ளார்கள்.

கொள்ளுப்பிட்டி பொலிசாரால் மேற்படி இரு இளைஞர்களும் கைதுசெய்யப்படும் போது, இவர்களிடம் காலம் சென்ற கடற்படை தளபதி கிளான்ஸிபெர்ணண்டோவின் சில புகைப்படங்களையும், நெக்கடிவ்களையும் பொலிசார் மீட்டதுடன், இவர்களுக்கு தங்குமிடவசதி செய்துகொடுத்த கொள்ளுப்பிட்டி தமிழ் வர்த்தகர் ஒருவரையும் பொலிசார் கைதுசெய்துள்ளார்கள்.

மேற்படி வர்த்தகர் நயினாதீவைச்சேர்ந்தவர் என்றும் பொலிசார் தெரிவித்தனர். (வி)

## தமிழீழமெங்கும் நினைவு ஒலி

(யாழ்ப்பாணம்)

நாளை 26-ம் திகதி இரவு 12 மணி 01 செக்கனுக்கு மாவீரர் நினைவாக தமிழீழமெங்கும் சமகாலத்தில் ஒரே சீராக அனைத்து இடங்களிலும் மணிகளில் நினைவொலி எழுப்புவதற்கேற்ப கடிகாரங்களை குறித்த நேரத்திற்கு சீர்படுத்தி தயார்படுத்தி வைக்குமாறு விடுதலைப்புலிகளின் அரசியல் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

## இன்று மாணவர் அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை பி. ப. 4 மணியளவில் கோட்ட ரீதியாக ஐந்து இடங்களில் விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பின் ஆண், பெண் மாணவர்களின் அணிவகுப்புகள் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

இவற்றில் வலிகாமம்கோட்ட மாணவர்களின் அணிவகுப்பு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும். மானிப்பாய் கட்டுடை சுபாஸ் சனசமூக நிலைய மைதானத்திலும் சித்தன்கேணி பிள்ளையார், கோவில் முன்றலிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும், வடமராட்சியில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து மாவீரர் வார நினைவுதினக் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## பலாலியிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் மேற்கொண்ட ஷெல்த்தாக்குதல்கள் பல பகுதிகளையும் அதிரவைத்தது:

கிளாலி, அச்சுவேலி, இடைக்காடு, தொண்டமானாறு பத்தமேனிப்பகுதிகளை நோக்கியே படையினர் இத்தாக்குதல்களை மேற்கொண்டனர், (56)

## பாதுகாப்புப் படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் இந்தச் சம்பவத்தில் அந்த வாகனத்தில் சென்ற ஒருவர் பலியானார். மற்றவர் தப்பியோடிவிட்டார்.

நேற்று மாலை கொழும்பு மாநகரில் சனநெரிசல் மிகுந்த பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது

இதனையடுத்து கொழும்பில் நேற்று பதற்றம் நிலவியது

இதேவேளையில் கொழும்பில் வாகனம் நிறுத்தி வைக்கப்படும் இடம் ஒன்றிலிருந்து இரண்டு வாகனங்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இந்தவாகனங்கள் வெடிகுண்டுகளை வைப்பதற்காக தீவிரவாதிகளால் திருடப்பட்டிருக்கலாம் எனவும் பொலிசா தெரிவித்தனர்.

## புலிகள் ஊடுருவல்

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருப்பதாகவும், இதனால் பல இடங்களில் தாக்குதல்கள் இடம்பெறலாமெனவும் பொது மக்களை விழிப்புடனும் அவதானத்துடனும் நடந்து கொள்ளுமாறு அரசாங்கம் நேற்று எச்சரிக்கை விடுத்தது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a New Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8